[1991 பிப்ரவரி 6

73—4989—திரு. சி. இராமசுவாமி :

கரியாலூர் அருகே மின்நிலையம்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வராயன் மலைப்பகுதியில் கரியாலூர் அருகே மலையிலேயே தோன்றி மலையிலேயே விழுகின்ற அருவியின் மூலம் கிடைக்கும் தண்ணீரை வைத்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தென்ஆற்காடு மாவட்டம், கல்வராயன் மலையில் கரியாலூர் அருகே பாயும் கோமுகி நதியின் குறுக்கே, வெள்ளிமலை என்ற இடத்தில் ஒரு நீர்த்தேக்க அணையும், கோமுகி நதியின் மற்றொரு கிளையின் குறுக்கே தொரடிப்பட்டி என்ற இடத்தில் ஒரு நீர்த்தேக்க அணையும், கோமுகி நதியின் கிளை நதியில் ஒருமுக அணை தாழ்வாழப்பாடி என்ற இடத்தில் கட்டி, சுரங்க நீர்ப்பாதை வழியாக எடுத்துச் சென்று, பரங்கிநத்தம் அருகே அமைய விருக்கும் மின்நிலையத்தினுடைய திறன் 20 மெகாவாட் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்திற்கு கோமுகி நதி நீர் மின்திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஆய்வு வேலைகள் முடிந்தவுடன் திட்ட அறிக்கை தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலோடு இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

திரு. சி. இராமசுவாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடத்திற்கான ஆய்வுப் பணிகள் எந்நிலையில் உள்ளன ? விரைவில் முடித்திட ஆவன செய்யப்படுமா ? கரியாலூர் என்ற பகுதி தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள என் தொகுதியில் வருகிறது. பின் தங்கிய தொகுதியாக உள்ள சங்கராபுரம் பகுதி இத்திட்டத்தின் மூலம் பயன்பெற வாய்ப்பு இருப்பதால் இதற்கு தனி கவனம் செலுத்தி முன் உரிமை அளித்திட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்

1992 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியபடி நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அவர்களுடைய அரசு வந்தவுடனே இதற்கான துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இன்றைக்கு இந்தத் திட்டத்திற்கான விரிவான ஆய்வுப் பணிகளை தமிழ்நாடு மின் வாரியம் மேற்கொண்டுள்ளது. ஆய்வுப் பணிகள் முடிந்தவுடன் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 74.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

74—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*1117—திரு. வ. சத்தியமூர்த்தி:
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சரிவர இயங்காததால், குடி தண்ணீர் வழங்கப்பெறவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்பட்ட கிராமங்கள் ஏறக்குறைய 10-க்கு 9 கிராமங்களுக்கு குடிநீர் கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. ஆனால் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அரசுக்கு கொடுக்கப்பட்ட புள்ளிவிவரத்தில் அந்த கிராமங்களுக்கு எல்லாம் குடிநீர் கொடுக்கப்பட்டு விட்டது என்று தகவல் வந்துள்ளது. ஆகவே கூட்டு குடிநீர்த் திட்டத்தின் மூலம் தண்ணீர் கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்ட கிராமங்களைப் பிரித்தெடுத்து புதிய திட்டம் வகுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இதுபற்றி பரிசீலனை செய்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.